பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
11 07 2024 **THURSDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. மத்திய பட்ஜெட்டில் இடம்பெறவேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்து பல்துறை வல்லுநர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஆலோசனை நடத்தினார்.

2. குடும்ப கட்டுப்பாடு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை மத்திய – மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

3. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், நாட்டின் பெரிய துறைமுகங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

4. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

5. இத்தாலி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Bollipalli – Kaliyanda Poonacha** இணை தற்போது விளையாடி வருகிறது.

>>>><<<<

அனைத்து தரப்பினருக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் மத்திய பட்ஜெட் அமைவதை உறுதி செய்ய பொருளாதார நிபுணர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆலோசனை நடத்தினார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், நித்தி ஆயோக் துணைத் தலைவர் திரு. **Suman Bery,** பிரதமரின் முதன்மைச் செயலாளர் திரு. பி.கே. மிஸ்ரா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 22ஆம் தேதி தொடங்குகிறது.

நடப்பு நிதியாண்டுக்கான முழுமையான பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வரும் 23ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யவுள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக, இடைக்கால பட்ஜெட்டை கடந்த பிப்ரவரி மாதம் அவர் தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

குடும்ப கட்டுப்பாடு திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதை மத்திய – மாநில அரசுகள் ஒருங்கிணைந்து

உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று உலக மக்கள் தொகை தினத்தை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், குறிப்பாக அதிக மக்கள்தொகை மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களில் அரசின் திட்டங்களை உறுதி செய்ய வேண்டியது அவசியம் என்று கூறினார்.

நாடுமுழுவதும் குறைவான பிறப்பு விகிதத்தை பராமரிப்பது அவசியம் என்றும் சில மாநிலங்கள் இதனை ஏற்கனவே செயல்படுத்தி வருவதாகவும் திரு. ஜெ. பி. நட்டா தெரிவித்தார்.

உலக மக்கள் தொகை தினத்தை ஒட்டி, தமிழகத்தின் திருவண்ணாமலையில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இதில் ஏராளமான மாணவ மாணவிகள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரவிச்சந்திரன் 35 செகண்ட்ஸ்)

>>>><<<<

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், நாட்டின் பெரிய துறைமுகங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய கப்பல்

போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம், **Vizhinjam** துறைமுகத்தில், கலங்கரை விளக்க சுற்றுலாவை மேம்படுத்துவது தொடர்பான கூட்டத்தில் இன்று அவர் பங்கேற்றுப் பேசினார்.

கடல்சார் நடவடிக்கைகளில் இந்தியாவை முன்னணி நாடாக மாற்ற மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

கலங்கரை விளக்க சுற்றுலாவை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

>>>><<<<

தில்லியில் ஆம் ஆத்மி தலைமையிலான அரசு, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிவிட்டதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் குறை கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களுக்கு தேவையான குடிநீரை வழங்குவதற்குப் பதிலாக, மதுபானக் கொள்கை

முறைகேட்டில் முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் அக்கறை காட்டியதாக குறிப்பிட்டார்.

அந்த முறைகேடு தொடர்பான குற்றப்பத்திரிகையில் அனைத்து உண்மைகளும் வெளிப்பட்டிருப்பதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் குற்றம் சாட்டினார்.

இதனிடையே, தில்லி மதுபான கொள்கை முறைகேடு தொடர்பான குற்றப்பத்திரிகையில் முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதை அடுத்து, அவர் பதவி விலக வேண்டும் என்று தில்லி பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மனோஜ் திவாரி வலியுறுத்தியுள்ளார்.

>>>><<<<

உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நீடித்த முன்னேற்றம் ஆகிய பிரிக்ஸ் நாடுகளின் கொள்கைகளை முன்னெடுத்து செல்வதில் இந்தியா முக்கியப் பங்காற்றுவதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் 10-வது பிரிக்ஸ் நாடுகளின் நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் இந்திய குழுவிற்கு தலைமையேற்று சென்றுள்ள அவர், அதன் முதலாவது கூட்டத்தில் உரையாற்றினார்.

அண்மையில் இந்தியாவில் முடிவடைந்த மக்களவைத் தேர்தலில் 65 கோடி பேர் வாக்களித்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

இரண்டாவது முறையாக தம்மை மக்களவைத் தலைவராக தேர்ந்தெடுத்தது தமக்கு கிடைத்த நல்வாய்ப்பு என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

பிரிக்ஸ் நாடாளுமன்ற குழுவில் இணைந்துள்ள புதிய உறுப்பு நாடுகளை வரவேற்பதாகவும் திரு. ஓம் பிர்லா குறிப்பிட்டார்.

>>>><<<<

பிம்ஸ்டெக் நாடுகளிடையே வர்த்தக ஒத்துழைப்பு மற்றும் கட்டமைப்பு உள்ளிட்ட துறைகளில் இணைந்து செயல்பட முடிவெடுக்கப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் அவர் தொடக்கவுரையாற்றினார்.

புதிய திட்டங்களை வகுப்பதில் இந்த ஆலோசனை கூட்டம் உதவியாக அமையும் என்று அவர் குறிப்பிட்டார்.

சுகாதாரம், விண்வெளி, டிஜிட்டல் கட்டமைப்பு உள்ளிட்ட துறைகளில் பிம்ஸ்டெக் நாடுகள் இணைந்து செயல்படுவது குறித்து இந்த கூட்டத்தில் தீர்வு காணப்படும் என்று திரு. ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>><<<<

இந்தியாவுக்கும், தாய்லாந்திற்கும் இடையே நீண்டகால கலாச்சார இணைப்புகள் உள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று புத்தமத நம்பிக்கைகள் தொடர்பான புகைப்பட கண்காட்சியை தொடங்கி வைத்து பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

புத்தரின் போதனைகளான அமைதி மற்றும் கருணையை போதிக்கும் உணர்வுப்பூர்வமான இரு நாடுகளுக்கும் பொதுவான புகைப்படங்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றிருப்பதாக அவர் கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான கலாச்சார உறவுகளை வலுப்படுத்தும் வகையில் இந்த கண்காட்சி அமைந்திருப்பதாகவும் திரு. கஜேந்திர ஷெகாவத் தெரிவித்தார்.

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கரை, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில், தற்போது 80 மீனவர்களும், 173 மீன்பிடி படகுகளும் இலங்கை வசம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்கள் இதுபோன்று சிறை பிடிக்கப்படுவது, அவர்களது வாழ்வாதாரத்தை பாதிப்பதாக அவர் கூறியுள்ளார்.

இந்த விவகாரத்தில், வெளியுறவுத்துறை வலுவான முயற்சிகளை உடனடியாக மேற்கொண்டு இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் மீட்க வேண்டுமென்று திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

இளநிலை நீட் தேர்வு முறைகேடு தொடர்பான வழக்கின் விசாரணையை இம்மாதம் 18ஆம் தேதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

மத்திய அரசு மற்றும் தேசிய தேர்வு முகமை ஆகியவை தாக்கல் செய்துள்ள மனுக்களுக்கு மனுதாரர்கள் பதில் அளிக்க ஏதுவாக விசாரணை ஒத்தி வைக்கப்படுவதாக தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் தலைமையிலான அமர்வு உத்தரவிட்டது.

>>>><<<<

கடந்த பத்தாண்டுகளில் 12 கோடியே 50 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. **Syed Zafar Islam,** இதன்மூலம் உலக அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கும் உலகின் மிகச் சிறந்த நாடுகளில் ஒன்றாக இந்தியா உயர்ந்துள்ளது என்று கூறினார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் பத்தாண்டு கால ஆட்சியில் 2 கோடியே 90 லட்சம் வேலைவாய்ப்புகள் மட்டுமே உருவாக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

>>>><<<<

உச்சநீதிமன்றத்தின் சேவையை தரமானதாக மேம்படுத்த பன்னோக்கு சேவை மையம் உதவும் என்று தலைமை நீதிபதி திரு. டி.ஒய். சந்திரசூட் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்ற வளாகத்தில் இன்று அந்த மையத்தை திறந்து வைத்துப் பேசிய அவர், புதிய மையம் வழக்கறிஞர்கள் தங்களின் வழக்குகள் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் முறைப்படுத்த உதவும் என்று கூறினார்.

>>>><<<<

நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கன முதல் மிககனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கொங்கன் மற்றும் கோவா பகுதிகளிலும், மகாராஷ்ட்ரா, கர்நாடக மாநிலங்களிலும், நாளை முதல் வரும் 15ஆம் தேதிவரை மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

இத்தாலி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Bollipalli – Kaliyanda Poonacha** இணை தற்போது விளையாடி வருகிறது.

>>>><<<<

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டிக்கு முன்னணி வீரர் நோவோக் ஜோக்கோவிச் முன்னேறியுள்ளார்.

>>>><<<<

இளநிலை நீட் தேர்வு எழுதிய மாணவர்களில் சிலர் இன்று புதுதில்லியில் மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதானை சந்தித்து பேசினர்.

தேர்வு குறித்த தங்களின் அனுபவங்களையும், தாங்கள் எதிர்கொண்ட சவால்களையும் அப்போது மாணவர்கள் அமைச்சருடன் பகிர்ந்து கொண்டனர்.

>>>>END<<<<